AMIL MADE EA

By

THE PHONETIC METHOD.

29MAR1926

V. M. Abraham

MADURA
MEENALOCHANI PRESS,
1926.

Rights Reserved.

TAMIL MADE EASY

By

THE PHONETIC METHOD.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAR 1926

V. M. Abraham.

MADURA
MEENALOCHANI PRESS,
1926.

Rights Reserved.

PREFACE.

The ear is the true medium for acquiring a new language. This is the golden rule upon which our method of learning a language should be based. If to speak fluently and to express our ideas clearly and forcibly is our primary object, this can only be acquired by the proper use of the sense of hearing, which, we may say, is the important factor as far as the learning of a new language is concerned, and therefore greater emphasis should be laid on the oral than on the written aspect.

Upon this principle, the following lessons have been prepared with a view to assist beginners, students as well as teachers.

To many of my missionary friends I should like to express my sense of indebtedness for help in the preparation of these lessons. I shall ever be grateful to any who send me their constructive criticisms and suggestions for the improvement of this little book.

V. M. ABRAHAM.

Tamil Language School,
KODAIKANAL, (S. India.)
JANUARY, 1926.

FOR THE TEACHER.

1. பொறுமையே உபாத்தியாயருக் கணிகலமாயிருக்க வேண்டும்.

2. மாணாக்கருக்கிருக்கும் கஷ்டங்களில் உபாத்தியாயர் கையாடவேண்டிய வழி இரக்கமும் அனுதாபமுமே.

3. மாணாக்கரை அதைரியப்படுத்தக்கூடிய வார்த்தைகளைப் பேசாதிருத்தல் உத்தமம்.

4. ஒரே சமயத்தில் சகல தப்பிதங்களையும் திருத்த முயலாமல், ஒவ்வொன்றாய்த் திருத்தல் பிரயோஜனமாகும்.

5. உபாத்தியாயர் எவ்வளவுதூரம் இங்கிலீஷ் பாஷையை உபயோகியாமலிருப்பாரோ, அவ்வளவு சீக்கிரம் அவரது மாணவர் தமிழ்ப்பாஷையைக் கற்றுக் கொள்ளக் கூடியவராவர்.

6. உபாத்தியாயர் எப்போதும், சுறுசுறுப்பாயும், மாணாக்கரின் தேர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயுமிருத்தல் அவசியம்.

7. சம்பாஷணை முறையிலேயே தமிழ் பேசவும், வாசிக்கவும், எழுதவும் போதிக்கவேண்டும் என்பதை மறக்கலாகாது.

Contents.

			Pages.
PART I	Graded Lessons,	1—34 Exercises.	1—37
,,	Charts for reading, pronunciation and dictation.		38—43
PART II	Conversational Exercises.		44—64
PART III	Tamil-English Vocabulary		65-116

TAMIL MADE EASY.

PART—I.

Note:—The following exercises are graded according to the order of their difficulties. Known to the unknown is the order of the course. In earlier stages irregular forms are generally more used, for I believe, they are more useful than regular ones. The teacher should try to avoid English translation as much as possible.

முதலாம் அப்பியாசம்.

1. நமஸ்காரம் அம்மா!
நமஸ்காரம் ஐயா!

2. அம்மா! நமஸ்காரம்.
ஐயா! நமஸ்காரம்.

3 நான் ஆபிரகாம்.
நீங்கள் யார்?
நான் சாமுவேல் அம்யாள்.
நான் எடி மிசி அம்மாள்.

4. நீங்கள் நல்ல சுகமா?
நான் நல்ல சுகம்.

5. இது என்ன?
இது மேஸை.
அது பேனா.
இது புத்தகம்.
இது நாற்காலி.
இது பூ.
இது இலை; அது பூ.
அது பென்சில், இது பேனா.

இரண்டாம் அப்பியாசம்.

(*a*) Review first exercise until pupils can readily answer and ask all questions.

(*b*) Introduce:—Personal pronouns—Adjective and Interrogative forms. ஆம்—இல்லை.

1. நான் இந்தியா தேசம்.
நீங்கள் எந்தத் தேசம்?

2. நான் அமெரிக்கன் மதுரை மிஷன்,
நீங்கள் எந்த மிஷன்?

3. நான் உபாத்தியாயர். (பண்டிதர், முனிசி)
நீங்கள் யார்?

4. அம்மா! நீங்கள் மிஷனெரியா?
ஆம் ஐயா! நான் மிஷனெரி.

5. ஐயா! நீங்கள் இந்தியா தேசமா?
இல்லை ஐயா, நான் இங்கிலாந்து தேசம்.

6. நான் யார்?
அவர்கள் யார்?
இவர்கள் யார்?

7. கனம் தாமஸ் அம்மாள் யார்?

8. அமெரிக்கா நல்லதேசமா?
இந்தியா நல்ல தேசமா?

9. நீங்கள் நல்ல மிஷனெரியா?
நான் நல்ல உபாத்தியாயரா.

மூன்றாம் அப்பியாசம்.

(*a*) Review previous exercises until pupils can readily answer and ask all questions.

(*b*) Introduce:—Personal pronouns and their genitive forms. இல்லை and அல்ல. உண்டு, உம்.

1. எது பூ?
   எது இலை &c.

2. இது பூவா இலையா?
   அது பூ அல்ல, இலை. &c.

3. இங்கே என்ன உண்டு?
   இங்கே இலை உண்டு.

4. இங்கே என்ன என்ன (என்னென்ன) உண்டு?
   இங்கே பூவும், இலையும், பேனாவும் உண்டு.

5. அங்கே பென்சில் உண்டா?
   அங்கே பென்சில் இல்லை.

6. இங்கே மேசை, நாற்காலி உண்டா?
   இங்கே மேசையும் இல்லை, நாற்காலியும் இல்லை.

7. இது பூவா, இலையா?
   அது பூவும் அல்ல, இலையும் அல்ல, புத்தகம்.

8. என் பேர் ஆபிரகாம்.
   உங்கள் பேர் என்ன?
   அவர்கள் பேர் என்ன?
   இவர்கள் பேர் என்ன?

9. அது யார் புத்தகம்?
   அது என் புத்தகம் அல்ல.

10. தமிழ்ப் புத்தகம் எங்கே?

நான்காம் அப்பியாசம்.

(*a*) Review previous exercises until pupils can readily answer and ask all questions. Whenever they answer correctly use the following expressions with all cheerfulness. சரி, நல்லது, மெத்த நல்லது, சந்தோஷம், அப்படியா? அப்படி அல்ல, &c.

(*b*) Introduce:—Personal pronouns and their dirivative forms of நல்ல and கெட்ட.

1. அது நல்ல பேனாவா?
 ஆம் அது நல்லது.
2. கோப்பி நல்லதா?
 கோப்பி கெட்டது.
3. தேத்தண்ணீர் நல்லதோ, கெட்டதோ?
4. தேயும் கெட்டது, கோப்பியும் கெட்டது.
 தண்ணீர் மெத்த நல்லது.
5. காப்பியும் தேயும் நல்லதல்ல.
6. கொடைக்கானல் நல்லதுமல்ல, கெட்டதுமல்ல.
7. நான் நல்லவனா?
 ஆம், நீங்கள் நல்லவர்கள்.
 நான் நல்லவன் or நல்லவள்.
 நாம் நல்லவர்கள்.
 நாங்கள் நல்லவர்கள்.
 நீ கெட்டவன் or கெட்டவள்.
 நீர் கெட்டவர்.
 நீங்கள் கெட்டவர்கள்.

(*c*) Count up to 5.

ஐந்தாம் அப்பியாசம்.

(*a*) Review previous exercises until pupils can readily answer and ask all questions.

(*b*) Introduce:—Personal pronouns and their derivative forms of நல்ல and கெட்ட. Demonstrative and Interrogative pronouns of அ, இ & எ.

1. அவன் கெட்டவன், நல்லவன்.
அவள் கெட்டவள், நல்லவள்.
அவர் கெட்டவர், நல்லவர்.
அவர்கள் கெட்டவர்கள், நல்லவர்கள்.
அது கெட்டது, நல்லது.
அவை கெட்டவை, நல்லவை.
அவைகள் கெட்டவைகள், நல்லவைகள்.

2. இந்தியா நல்ல தேசமா?
இந்தியர் நல்லவர்களா?
அமெரிக்கர் கெட்டவர்களா?
ஆங்கிலேயர் மிஷனெரிகளா?

3. எவன் நல்லவன்?
எவனெவன் கெட்டவன்?
யார் இந்தியர்?
யாரார் இந்தியர்?
நல்லவன் கெட்டவன் யார்?

4. அவன் தோட்டக்காரன்.
இவன் என் வேலைக்காரன்.
இவர்கள் நல்லவர்கள் அல்ல.
அவர்களா ஆங்கிலேயர்?

(*c*) Count up to 7.

ஆரும் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) பிரியம்—பிரியம் இல்லை.
(2) தெரியும்—தெரியாது.
(3) Parts of our body.

1. உங்களுக்குத் தமிழ் பிரியமா?
2. வெந்நீர் பிரியமா, குளிர்ந்த ஜலம் பிரியமா?
3. கறி சோறு பிரியமில்லையா?
4. உமக்கு இந்திய சாப்பாடு பிரியமோ?
5. பணம் பிரியமா, ஜனம் பிரியமா?
6. எனக்கு இரண்டும் பிரியமில்லை.
7. நாலு பணம் வேண்டும், அல்லது நாலு ஜனம் வேண்டும். (Proverb)
8. உங்களுக்குப் பாஷை பிரியமா?
9. உங்களுக்கு எந்தப் பாஷை தெரியும்?
10. எனக்குத் தமிழ்ப் பாஷைதான் தெரியும்.
11. உங்களுக்குத் தமிழ் தெரியுமா?
12. எனக்குத் தமிழ் ஒன்றும் தெரியாது.

(*c*) To read and write:—Show a picture and ask the pupils, இது என்ன? Write the answer, அது ப–ட–ம் on a slip of stiff paper. Let them see it as many times as they can and then teach them how they should read and write correctly. This will become home exercise for them. For dictation refer to charts found in Ex. 35.

(*d*) Count up to 10.

13. எனக்கு ஒரு தலை உண்டு; அதில் ஒரு மூக்கும், இரண்டு காதுகளும், இரண்டு கண்களும், ஒரு வாயும், ஒரு நாக்கும், முப்பத்திரண்டு பற்களும் உண்டு.

ஏழாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Personal pronouns in the dative case.

(2) அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு.

(3) அத்தனை, இத்தனை, எத்தனை.

(4) use of தான் and உம்.

(5) வேண்டும், & வேண்டாம்.

(6) போதும் and போதாது.

1. நீங்கள் சௌக்கியமா? (சுகமா)
   மெத்த வந்தனம் ஐயா! நல்ல சுகந்தான்.
   எனக்கு அவ்வளவு நல்ல சுகம் இல்லை

2. உங்கள் பிள்ளைகள் சௌக்கியந்தானா?
   ஆம், அவர்கள் சௌக்கியந்தான்.

3. Drill Table No. 1. (Defective Verbs)

1	2	3	4
எனக்கு எங்களுக்கு நமக்கு உனக்கு உமக்கு உங்களுக்கு அவனுக்கு அவளுக்கு அவருக்கு அவர்களுக்கு அதற்கு அவற்றிற்கு அவைகளுக்கு	(1) அத்தனை, இத்தனை, எத்தனை. (2) அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு.	(1) மரங்கள்,காய்கள், பழங்கள்,பூக்கள் குடை,சட்டை,கோல், மாடுகள்,பசுக்கள், ரூபாய், அணா, பைசா, மேசைகள்,தொப்பி,கத்தி,கடிகாரம், கடிதம், மனிதர்,ரொட்டி, பை, மைக்கூடு, புத்தகம், கண்ணாடி. (2) புத்தி,உப்பு, சர்க்கரை,பால்,சுடுதண்ணீர்,குளிர்ந்தஜலம், வெண்ணெய், மிளகுதூள்,சுகம், பணம், பெலம், சாப்பாடு,உடுப்பு,சந்தோஷம், பயம், கோபம், விசனம், பசி, தாகம்,களைப்பு,வேகம்,கூச்சம், வெட்கம், மேடு, பள்ளம், உயரம், தமிழ்.	1. இல்லை. 2. உண்டு. 3. வேண்டும். 4. வேண்டாம். 5. போதும். 6. போதாது. 7. தெரியும். 8. தெரியாது.

உதாரணமாக:—

(1) எனக்கு அத்தனை மரங்கள் இல்லை.
எங்களுக்கு இத்தனை பழங்கள் வேண்டாம்.
உங்களுக்கு எத்தனை பூக்கள் போதும்.

(2) அவனுக்கு அவ்வளவு புத்தி இல்லை.
அவருக்கு இவ்வளவு சாப்பாடு போதும்.
அவைகளுக்கு இவ்வளவு தண்ணீர் போதாது. &c.

எட்டாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Locative case.
(2) புதிய—பழைய
(3) இன்றைக்கு
(4) Parts of our body.

1. கொடைக்கானலில் ஆஸ்பத்திரி உண்டோ?
2. மதுரையில் நல்ல வைத்தியர் தெரியுமா?
3. தஞ்சாவூரில் மிஷன் வேலை உண்டா?
4. திண்டுக்கல்லில் நல்ல கிறிஸ்தவர்கள் இல்லையா?
5. நீங்கள் புதிய மிஷனெரியா, பழைய மிஷனெரியா?
6. என் புது மழைச்சட்டை எங்கே?
7. இன்றைக்குப் புதுப்பாடம் வேண்டுமோ?
8. என் தொப்பி புதியதோ, பழையதோ?
9. உங்களுக்கு இன்றைக்கு வீட்டில் வேலை உண்டா?
10. இந்தியா எனக்குப் பழைய தேசம்.
11. உங்களுக்கு இந்தியா பழைய தேசமா?

(*c*) To read and write:—Show a tree and ask the pupils, அது என்ன? write the answer, இது மரம் on a silp of stiff paper. After they have seen it enough, teach them how they should read and write correctly.

(*d*) Count up to 15.

12. எனக்கு இரண்டு கைகளும், கைவிரல் பத்தும், இரண்டு கால்களும், கால் விரல் பத்தும் உண்டு.

ஒன்பதாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Colours, only five kinds.
(2) Imperative Mood, இரு,வா,போ.
(3) தயவுசெய்து, சீக்கிரம், மெதுவாய்.
(4) காத்திரு,கொண்டுவா,கொண்டுபோ.

1. என் கையில் என்ன இருக்கிறது?
2. என் கையில் என்ன பூ இருக்கிறது?
3. இது என்ன நிறம்?
இது சிவப்பு நிறம்.
இது கருப்பு நிறம்.
இது வெள்ளை நிறம்.
இது பச்சை நிறம்.
இது மஞ்சள் நிறம்.
4. எந்தப் பூ வேண்டும்?
5. உங்களுக்கு எந்த நிறம் பிரியம்?
6. யாருக்குக் கருப்புப் பூ வேண்டும்?
7. இங்கே இரு, இருங்கள்.
8. இங்கே தயவுசெய்து வாருங்கள், வா.
9. அங்கே போங்கள், போ.
10. இங்கே தயவுசெய்து (சீக்கிரம், மெதுவாய்) வாருங்கள்.
11. இங்கே கொஞ்சம் காத்திருங்கள்.
12. எனக்கு இன்றைக்கு வெள்ளைப் பூக் கொண்டுவாருங்கள்.
13. இதைக் கொண்டுபோங்கள்.
14. இங்கே கொஞ்ச நேரம் காத்திருங்கள்.
15. உங்களுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு கொண்டு போங்கள். (Drill here with similar expressions.)

பத்தாவது அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Colours, all.

(2) சின்ன, பெரிய, ஆனால், ஓகோ.

(3) a. அழகாய் இருக்கிறது.

b. வாசனையாய் இருக்கிறது.

1. இந்த மேஜையில் என்னென்ன பூக்கள் உண்டு?
2. இங்கே புதுப்பூக்கள் இல்லையா?
3. ஆம், ஆனால் எனக்கு அவைகள் பேர் தெரியாது.
4. ஓகோ! இது நீல நிறம்.
   இது ஊதா நிறம்.
   இது ரோஜா நிறம்.
   இது கபில நிறம்.
   இது சாம்பல் நிறம்.
5. இவைகள் சின்னப் பூக்கள்.
6. எங்கள் சொந்தத் தேசத்தில் பெரிய பூக்களுண்டு.
7. இந்த ரோஜா என்ன அழகாயிருக்கிறது!
8. இந்த ஊதாப்பூ எவ்வளவு வாசனையாயிருக்கிறது!
9. உங்களுக்குப் பெரியது வேண்டுமா, சின்னது வேண்டுமா?

(*c*) To read and write:—Make a circle on the board and say, இது வட்-டம். Teach them the correct pronunciation first and then make them read and write the word, வட்-டம்.

(*d*) Names of certain flowers—மல்லிகை, சிவந்தி, தாமரை, ரோஜா, தாழை, முல்லை.

(*e*) Count up to 20.

பதினோராம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce·—(1) Description of a watch.
(2) ஆயிற்று, அடித்து, அடிக்க, அரை, கால், முக்கால், மணி, நேரம்.

A

1. என்னிடத்தில் ஒரு கடிகாரம் உண்டு.
2. அது பழைய கடிகாரமல்ல, புதியது.
3. அது தங்கக் கடிகாரமுமல்ல, நிக்கல் கடிகாரமுமல்ல, வெள்ளிக் கடிகாரம்.
4. இது பாக்கெட் கடிகாரமல்ல, கைக் கடிகாரம்.
5. கைக் கடிகாரந்தான் மெத்த நல்லது. உங்களுக்குப் பிரியமோ, இல்லையோ, எனக்குத் தெரியாது, ஆனால் எனக்கு மெத்தப் பிரியம்.
6. இதின் விலை எனக்குத் தெரியாது.
7. இது என் சொந்தக் கடிகாரம் அல்ல.
8. அது என் தகப்பனாரின் கடிகாரம்.

B

1. மணி என்ன?
2. நேரம் ஆயிற்று.
3. மணி ஆயிற்று.
4. ஒரு மணி ஆயிற்றா?
5. சாப்பாடு ஆயிற்றா?
6. ஒன்று+ஏ+கால் மணி ஆயிற்று.
7. ஒன்று+அரை மணி ஆயிற்று.
8. இரண்டு+ஏ+முக்கால் மணி ஆயிற்று.
9. பத்து அடித்து, ஐந்து நிமிஷம் ஆயிற்று.
10. பத்து அடிக்க ஐந்து நிமிஷம் உண்டு.

பன்னிரண்டாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Description of a watch.

(2) சரியாய், எப்போதும், பிந்தி, முந்தி, அதிகம், கொஞ்சம், நன்றாய், ஒருபோதும்.

(3) போகிறது is used both as a finite verb and a verbal noun.

(4) சாவிகொடு, திருப்பு.

C

1. என் கடிகாரம் சரியாய்ப் போகிறது.
2. என் கடிகாரம் எப்போதும் பிந்திப்போகிறது. (Always goes late.)
3. உங்கள் கடிகாரம் முந்திப்போகிறது.
4. என் கடிகாரம் ஐந்து நிமிஷம் முந்திப்போகிறது.
5. உங்கள் கடிகாரம் நன்றாய்ப் போகிறதா?
6. என் கடிகாரம் பிந்திப்போகிறது இல்லை.
7. என் கைக்கடிகாரம் ஒருபோதும் முந்திப்போகிறதில்லை. (Never goes late)

D

1. கடிகாரம் பிந்திப்போகிறது பிரியமா?
2. பிந்திப்போகிறது எனக்குப் பிரியமில்லை.
3. இந்தக் கடிகாரம் முந்தியும் பிந்தியும் போகிறது.
4. இது முந்திப்போகிறதுமில்லை, பிந்திப்போகிறதுமில்லை, எப்போதும் சரியாய்ப் போகிறது.
5. சாவி கொடுங்கள்.
6. மணி முள், நிமிஷ முள் திருப்புங்கள்.

பதின்மூன்றுவது அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Accusative case.
(2) Imperative Mood.
(3) Ordinals முதல், இரண்டாம், மூன்றும்.
(4) ஆயத்தம் செய், ஆயத்தமாயிரு.
(5) வெளியே, உள்ளே.

1. அவனை மெதுவாய்க் கொண்டுவாருங்கள்.
2. தயவு செய்து, இந்தப் புஸ்தகத்தைப் பங்களாவுக்குக் கொண்டுபோங்கள்.
3. முதல் மணி ஆயிற்று, சீக்கிரம் கோவிலுக்கு வாருங்கள்.
4. இரண்டாம் மணி அடித்து ஆயிற்று, ஆயத்தமாயிருங்கள்.
5. சாப்பாட்டு நேரம் ஆயிற்று, சீக்கிரம் சாப்பாடு ஆயத்தம் செய்யுங்கள்.
6. கோவிலுக்கு வேதபுஸ்தகம் கொண்டுபோங்கள்.
7. கோவிலுக்குப் பாட்டுப்புஸ்தகம் கொண்டுபோங்கள்.
8. எனக்குச் சுகமில்லை, ஆஸ்பத்திரிக்கு என்னைக் கொண்டுபோங்கள்.
9. வெளியே காத்திருங்கள்.
10. உள்ளே தயவு செய்து வாருங்கள்.
11. ஐயா! மேசை, நாற்காலிகளை உள்ளே கொண்டு வாருங்கள்.

(*c*) Names of certain insects:—எறும்பு, பாம்பு, தேள், புழு, தேனீ, பல்லி, கரையான், மூட்டுப்பூச்சி, கொசு, பேன், தேரை, பட்டுப்பூச்சி, நாகம், கம்பளிப்பூச்சி, குளவி, சாரைப்பாம்பு, விரியன், வண்ணாத்திப்பூச்சி. &c.

பதினான்காவது அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Conjugation of வா, போ, படி.
I Per. Singular.

(2) காலை, மதியம், மாலை, பாடசாலை.

(3) வரைக்கும், நேற்று, நாளைக்கு.

Present Tense.

1. நான் காலையில் பாடசாலைக்கு வருகிறேன்.
2. நான் காலையில் பாடசாலையில் மூன்றுமணி நேரம் தமிழ் படிக்கிறேன்.
3. நான் மதியம் பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குப் போகிறேன்.

Past Tense.

1. நான் நேற்றுக் காலையில் ஒன்பது மணிக்கு வந்தேன்.
2. நான் நேற்றுக் காலையில் 11-மணி வரைக்கும் பாடசாலையில் தமிழ்ப் படித்தேன்.
3. நான் மதியம் 12-மணிக்கு வீட்டுக்குப் போனேன்.

Future Tense.

1. நான் நாளைக்கு ஒன்பது மணிக்குப் பாடசாலைக்கு வருவேன்.
2. நான் நாளைக்குக் காலையில் 11-மணி வரைக்கும் பாடசாலையில் தமிழ் படிப்பேன்.
3. நான் நாளைக்குக் காலையில் 12-மணிக்கு வீட்டுக்குப் போவேன்.

Imperative.

1. காலையிலும், மாலையிலும், பாடசாலை, வாருங்கள்.
2. காலையில் இரண்டு மணி நேரமும், மாலையில் இரண்டு மணி நேரமும் தமிழ் படியுங்கள்.
3. மதியம் 12-மணிக்கு, சாப்பாட்டுக்கு, வீட்டுக்குப் போங்கள்.

(*c*) To read and write:—Show a wheel and say இது சக்-க-ரம். Make them pronounce சக்-க-ரம் correctly and then let them learn to read and write.

பதினைந்தாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Conjugation of இரு. I Per- plural.

(2) use of ஆக, பின்பு, ஆகையால்.

(3) போன வருஷம், இந்த வருஷம்.

(4) இப்போது அடுத்தவருஷம்,காலம்.

1. நாங்கள் புதிய மிஷனெரிகள், எங்கள் சொந்தத் தேசம் டென்மார்க்கு, எங்களுக்கு இங்கிலீஷ் பாஷை அவ்வளவு அதிகம் தெரியாது. ஆகையால் போனவருஷம் நாங்கள் இங்கிலாந்து தேசத்துக்குப்போய், அங்கே லண்டனில் ஒருவருஷம் இருந்தோம். அக்காலத்திலே கொஞ்சம் இங்கிலீஷ்பாஷை படித்தோம். அதற்குப்பின்பு இந்தவருஷம், இந்தியா தேசத்திற்கு மிஷனெரியாக வந்தோம். இப்போது திருக்கோவிலூரில் கொஞ்சக்காலம் இருப்போம். ஆனால் சீக்கிரத்தில் கொடைக்கானல் பாஷைப் பாடசாலைக்குப் போவோம்.

2. இந்த வருஷம் மதுரையில் இருக்கிறோம். போன வருஷம் இங்கிலாந்தில் இருந்தோம். அடுத்தவருஷம் பாஷைப் பாடசாலையில் இருப்போம்.

(*c*) Chorus work for correct intonation:—

யானைவரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே. (Proverb)

(*d*) Summary of letters, already learnt:—

(1) Vowels;—அ, இ.

(2) Consonants:—த், ப், ட், ம், ர், வ், ல், ய், ச், க்.

பதினாறாவது அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Conjugation of எழுந்திரு in all person, number, and gender.

(2) ஒவ்வொரு நாளும், படுக்கையிலிருந்து.

(3) கண்ணாடி, முகம், பார், சீவு, சீப்பு.

1. Drill Table No. 2. Present tense only.

நான்	1. ஒவ்வொரு நாளும்	எழுந்திருக்கிறேன்.
நாம்	2. காலையில்	எழுந்திருக்கிறோம்.
நாங்கள்	3. ஆறு மணிக்கு	எழுந்திருக்கிறோம்.
நீ	4. படுக்கையிலிருந்து	எழுந்திருக்கிறாய்.
நீர்		எழுந்திருக்கிறீர்.
நீங்கள்		எழுந்திருக்கிறீர்கள்.
அவன்		எழுந்திருக்கிறான்.
அவள்		எழுந்திருக்கிறாள்.
அவர்		எழுந்திருக்கிறார்.
அவர்கள்		எழுந்திருக்கிறார்கள்.
அது		எழுந்திருக்கிறது.
அவை		எழுந்திருக்கின்றன.
அவைகள்		எழுந்திருக்கின்றன.

3. குளிர்ந்த ஜலத்தில் குளிக்கிறேன்.
ஒரு துண்டினால் என் சரீரத்தைத் துடைக்கிறேன்.
என் கண்ணாடிக்கு முன் நிற்கிறேன்.
என் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கிறேன்.
சீப்பினால் என் தலையைச் சீவுகிறேன்.

(*c*) To read and write:—Point out a window and say சன்-னல். Teach them how to read and write this.

(*d*) Chorus work for correct intonation:—
வாய் இருந்தால் வங்காளம் போகலாம். (Proverb)

பதினேழாவது அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Conjugation in all person, number and gender.

(2) Cases.

(3) வழியாய், மாதம், தேதி, பெண்ஜாதி, பிள்ளைகள், சிநேகிதர், கப்பல், சனிக்கிழமை.

1. Drill Table, No. 3.

நான்	1. இங்கிலாந்திலிருந்து	வந்தேன்
,,	2. இந்தியாவுக்கு	,,
,,	3. பிரித்தானியாக் கப்பலில்	,,
,,	4. பம்பாய் வழியாய்	,,
,,	5. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்துநாலாம் வருஷம்	,,
,,	6. அக்டோபர் மாசம்	,,
,,	7. ஏழாம் தேதி	,,
,,	8. சனிக்கிழமை 2-மணிக்கு	,,
,,	9. என் பெண்ஜாதியோடும்	,,
,,	10. என் பிள்ளைகளோடும்	,,
,,	11. என் சிநேகிதரோடும்	,,
,,	12. சுகமாயும், சந்தோஷமாயும்	,,

Note:—In the above table, the teacher may substitute any person, number, gender and tense.

(*c*) Chorus work for correct intonation:

புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?

பதினெட்டாவது அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Defective Verbs. முடியும், முடியாது. கூடும், கூடாது. மாட்டேன்.

(2) Negative tenses.

(3) Cases.

1. Drill Table No. 4. (Defective Verbs).

நான்	1. நாளைக்கு, இன்றைக்கு,		
	நாளைநின்று, அடுத்த வருஷம்.		1 வேண்டும்
நாம்	2. அங்கே, இங்கே, எங்கே.		
நாங்கள்	அப்படி, இப்படி, எப்படி.		2 வேண்டாம்
நீ	3. மதுரைக்கு, கடைக்கு, வீட்டு	போக	
நீர்	க்கு, பாடசாலைக்கு, வேலைக்கு,		3 முடியும்
நீங்கள்	ஆஸ்பத்திரிக்கு, சீர்மைக்கு,	or	
அவன்	பிரசங்கத்திற்கு, வயலுக்கு,		4 முடியாது
	தோட்டத்திற்கு &c.	வா	
அவள்	4. உன்னோடு, அவனோடு,		5 கூடும்
அவர்	அவளோடு, என்னோடு,	or	
அவர்கள்	அவர்களோடு, அதோடு &c.		6 கூடாது
அது	5. இப்போது, அப்போது,		
அவை	எப்போது, அன்று, இன்று,	any	7 இல்லை
	என்று.	Infinitive	
அவைகள்	6. மெதுவாய், சீக்கிரமாய்,		8 மாட்டு +
	வேகமாய், உடனே &c.		Per. term.

2. புஸ்தகம் இருந்தால் வகுப்புக்குப் போகலாம்.
காசு இருந்தால் கடைக்குப் போகலாம்.
நல்ல உடுப்பு இருந்தால் கோவிலுக்குப் போகலாம்.
வேலை இருந்தால் உடனே போகலாம்.

(*c*) Chorus work for correct intonation:
பழகப் பழகப் பாலும் புளிக்கும். (Proverb)

(*d*) To read and write:—Show a gold coin and say தங்—கப்—ப—ணம். Give the meaning of those words, correct pronunciation and then, teach them to write those two words together.

(*e*) Count up to 30.

(*f*) Names of certain animals:— பசு, மாடு, பன்றி, குதிரை, எருமை, நாய், பூனை, கழுதை, புலி, கரடி, யானை, முயல், வெள்ளாடு, அணில், வரிக்குதிரை, மான், சிங்கம், ஒட்டகம், எலி, எருது, குரங்கு, ஓநாய்.

பத்தொன்பதாவது அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Verbal participles used absolutely.

(2) Negative tenses.

1. Drill Table No. 5. (Verbal participles.)

1	8-மணி	அடித்து	10-நிமிஷம்	ஆயிற்று
2	சாப்பாடு	ஆகி	அதிக நேரம்	,,
3	என் தகப்பனர்	இறந்து	அதிகக் காலம்	,,
4	பொழுது	விடிந்து	ஒரு நாழிகை	,,
5	இந்தியாவுக்கு	வந்து	இரண்டு வருஷம்	,,
6	உங்களைப்	பார்த்து	வெகு காலம்	,,

7 என் தம்பி மரத்தில் ஏறிக் கால் தவறிக் கீழே விழுந்து, கை கால் ஒடிந்து, மரித்துப் போனன்.

2. மதுரைக்குப் போகவில்லையா?
இப்போது சாப்பிடுகிறீர்களா?
நேற்றுப் பள்ளிக்கூடம் போனீர்களா?
இன்றைக்குச் சாப்பாட்டுக்கு வருகிறீர்களா?
நாளைக்குக் கோவிலில் பிரசங்கம் செய்வீர்களா?
நாளை நின்று என்னேடு உலாவ வருவீர்களா?

Note:—Answer these questions, then, you will know the correct and idiomatic uses of Negative tenses.

(*c*) Chorus work for correct intonation:
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

(*d*) Names of certain trees:—வாழைமரம், பனைமரம், தென்னைமரம், ஆலமரம், அரசமரம், வேப்பமரம், அத்தி மரம், புளியமரம், மாமரம், அரசமரம், நாவல்மரம், ஈச்ச மரம், பூவரசமரம், மூங்கில்மரம், சவுக்குமரம், கருவேல மரம், &c.

இருபதாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Postpositions (A)

(2) Change person, gender and tense.

(1) Drill Table No. 6. (Postpositions A.)

நான்	என் மேசையை	மேசை—யின்—மேல்	வைக்கிறேன்.
		மேசை—க்கு—மேல்	
		மேசை—யில்	
		மேசை—க்குள்	
		மேசை—க்குக்—கீழே or கீழ்	
		மேசை—யின்—கீழே or கீழ்	
		மேசை—க்குக்—கிட்ட or பக்கத்தில்	
		மேசை—முன் or முன்னே	
		மேசை—க்கு—முன் or முன்னே	
		மேசை—க்குப்—பின் or பின்னே	
		மேசை—யைச்—சுற்றிலும் or சுற்றி	
		மேசை—க்கு—நடுவே or நடுவில்	
		மேசை—களுக்கு—ஊடே, நடுவே	

(*c*) Count up to 40.

(*d*) To read and write:—Show some fruits and say ப—ழங்—கள். First let them learn the correct pronunciation and then let them write the word.

(*e*) Summarise all letters learnt until now.

(1) Vowels:—அ, இ

(2) Consonants:—(*a*) ப்—ம்—வ்

(*b*) ன்—ல்—ர்—ய்—ச்

(*c*) ள்—ழ்—ட்

(*d*) க்—ங்

(*f*) Chorus work for correct intonation:—

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

இருபத்தோராம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Postpositions. B.

(2) Change person, gender and tense.

(1) Drill Table No. 7. (Postpositions B.)

அவர்கள்	தோட்டத்து—க்கு தோட்டத்து—க்கு—உள்ளே or வெளியே தோட்டத்து—இன்—வழியே or வழியாய் தோட்டத்து—இலிருந்து	வந்தார்கள்.
	பணம்—இல்லாமல் பணத்துக்—காக பணத்தின்—பொருட்டு or நிமித்தம் பணத்தின்—ஆல் பணத்து—ஒடு பணங்—கொண்டு பணத்தைக்—குறித்து	

(*c*) To read and write:—Show ¼ anna piece and say, இது கால் அணா. Now point out the long ஆ sounds. First let them learn to write the vowel ஆ, and then the secondary forms of ஆ,

1. ா, in கால், பால், மாமா, தா.
2. ா, in அணா, நானா, மைனா.
3. ா, in புரா.

(*d*) Chorus work for correct intonation:

தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை.

இருபத்திரண்டாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Conjugation of Verbs (Neuter future.)
(2) Sounds of animals.
(3) Days of the week.

(1) Drill Table No. 8. (Sounds of animals.)

1.	நாய்	குலைக்கும்
2.	குதிரை	கனைக்கும்
3.	பன்றி	உறுமும்
4.	சேவல்	கூவும்
5.	கழுதை	கத்தும்
6.	பூனை	கத்தும்
7.	மாடு	கனைக்கும்
8.	புரு	கூவும்
9.	ஆந்தை	அலறும்
10.	பாம்பு	சீறும்
11.	நரி	ஊளையிடும்
12.	சிங்கம்	கர்ச்சிக்கும்
13.	மயில்	கூவும்
14.	வண்டு	இரையும்
15.	பெட்டைக்கோழி	கொக்கரிக்கும்
16.	வாத்து	கூப்பிடும்.

(*c*) To read and write:—Show a fan and say, விசிறி. Explain the secondary forms of இ,

(1) ி, in தி, சி &c.

(2) ி, in ரி, டி &c.

Let them learn to write திரி, படி.

(2) Days of the week:—

ஞாயிற்றுக்கிழமையில் தேவனைத்தேடி ஓய்ந்திரு.
திங்கட்கிழமையிலும்
செவ்வாய்க்கிழமையிலும்
புதன்கிழமையிலும்
வியாழக்கிழமையிலும் } உன் பாடங்களைப் படி,
வெள்ளிக்கிழமையில் அந்த வாரத்துப் பாடத்தில் சோதனை கொடு.
சனிக்கிழமையில் உனக்கு இஷ்டமானதைச் செய்.

இருபத்து மூன்றும் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) இங்கிலிஷ் காலம்.
(2) Directions and angles.

1. Drill Table No. 9.

அறுபது விநாடி கொண்டது ஒரு நிமிஷம்.
அறுபது நிமிஷம் கொண்டது ஒரு மணி.
இருபத்து நாலு மணி நேரம் கொண்டது ஒரு நாள்.
ஒரு இராப் பகல் கொண்டது ஒரு நாள்.
ஏழு நாள் கொண்டது ஒரு வாரம்.
நாலு வாரம் கொண்டது ஒரு மாசம்.
பன்னிரண்டு மாசம் கொண்டது ஒரு வருஷம்.

---

2. Directions:—
கிழக்கு or கீழ்திசை.
மேற்கு or மேற்றிசை.
தெற்கு or தென்றிசை.
வடக்கு or வடதிசை.
Here கீழ், மேல், தென், வட are Adjectives.

3. Intervening angles:—
தென் கிழக்கு,
தென் மேற்கு.
வட மேற்கு.
வட கிழக்கு.

(*c*) To read and write:—Show the picture of a fly and say, ஈ, explain the Secondary form of ஈ, ீ and then let them write தீ, நீ, பீ, சீ, டீ.

(*d*) Chorus work for correct intonation:—
கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
கூழ் ஆனாலும் குளித்துக் குடி.

இருபத்து நாலாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—A list of useful particles.

1. இன்னும் கொஞ்ச நேரம் உண்டு.
2. இனிமேல் (இனி) என்மேல் குற்றமில்லை.
3. ஐயோ, பாவம், எவ்வளவு வேதனை!
4. ஏறக்குறைய எட்டு மணிக்குத் தந்தி வந்தது.
5. சும்மா சொன்னால் சுமார் பத்து ரூபாய் நஷ்டமாகும்.
6. யானை ஆனாலும் (ஆகிலும், ஆயினும்) பானை ஆனாலும் வாங்கிக்கொள்.
7. ஆகிலும், இது என் குற்றம் அன்று.
8. பணம் மாத்திரம (மட்டும்) இருந்தால் போதுமா?
9. நீ நல்லவன், ஆகையால், (ஆனதால்) உனக்கு வெகுமதி கொடுப்பேன்.
10. நாடோறும் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறாயா?
11. இவனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
12. அப்புறம், வேறே என்ன நடந்தது?
13. பிறகு (பிற்பாடு) இதை நீ செய்யக் கூடுமா?
14. அவன் ஆஸ்திக்காரன், என்றாலும், நல்லவன்.
15. எப்படியும், நாலு மணிக்குள் இதைச் செய்ய வேண்டும்.
16. உம்மை அல்லாமல் (அன்றி) எனக்குத் துணை யார்?
17. பணம் இல்லாமல் (இன்றி) ஏன் கடைக்குப் போகிறாய்?
18. முதலிலிருந்து கஷ்டத்தோடு படித்தால் ஒழிய தேற மாட்டாய்.
19. தமிழைப் பார்க்கிலும் இனிமையான ஒரு பாஷை உண்டோ?
20. முதல் முதல் நீங்கள் கற்றுக்கொண்ட தமிழ்ப் பதம் என்ன?
21. ஒருவேளை அவன் வீட்டில் இருப்பான்.
22. கடைக்குப் போ, அல்லது வீட்டு வேலையைப் பார்.
23. வியாதிக்கு மருந்து சாப்பிடு, இல்லாவிட்டால் சாவாய்.
24. இதைத்தவிர, வேறு சொற்களும் உண்டு.

இருபத்தைந்தாம் அப்பியாசம்.

(*a*) Review.
(*b*) Introduce:—(1) Perfect and Progressive forms. (Change person, gender & tense.)

1. Drill Table No. 10. (Perfect & Progressive forms)

அவர்	எனக்கு	பணம்	கொடுத்து	இருக்கிறார்	Perfect Tense
			கொடுத்து	இருந்தார்	Pluperfect Tense
			கொடுத்து	இருப்பார்	Future Perfect Tense
			கொடுத்துக்	கொண்டு	இருக்கிறார் Present
			கொடுத்துக்	கொண்டு	இருந்தார் Past
			கொடுத்துக்	கொண்டு	இருப்பார் Future
					Progressive Tenses
			கொடுத்து	வருகிறார்	Other ways to express Progressive action.
			கொடுத்து	வந்தார்	
			கொடுத்து	வருவார் or	
			கொடுத்துக்	கொண்டு	வருகிறார்
			கொடுத்துக்	கொண்டு	வந்தார்
			கொடுத்துக்	கொண்டு	வருவார்

(*c*) To read and write:—Show some salt and say, இது உப்பு. Teach them the secondary forms of உ,

1. ு in டு, கு, மு, ரு, ழு, ளு.
2. ு in பு, சு, யு, வு.
3. ு in து, ணு, நு, னு, று.

(*d*) Chorus work for correct intonation:—
ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்.

(*c*) Seasons:—கோடைகாலம், வேனிற்காலம், பனிகாலம், இலையுதிர்காலம், மழைகாலம், வசந்தகாலம், வெயிற்காலம், காற்றுக்காலம், குளிர்காலம்.

இருபத்தாறும் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Conjugation of Verbs.
(Change person, gender, & tense.)

1. Drill Table No. 11. (Conjugation of Verbs.)

நான்	நாற்காலியில்	உட்கார்ந்திருக்கிறேன்
	நாற்காலியிலிருந்து வேகமாய்	எழுந்திருக்கிறேன்
	வலது பக்கம் or இடது பக்கம்	திரும்புகிறேன்
	கதவுக்கு நேரே or எதிரே	நடக்கிறேன்
	கதவுக்குக் கிட்ட or அருகே or அருகில்	நிற்கிறேன்
	கைப்பிடியைக் கெட்டியாய்ப்	பிடிக்கிறேன்
	கைப்பிடியை இடதுபக்கம்	திருப்புகிறேன்
	கதவைத்	திறக்கிறேன்
	வீட்டுக்குள்ளே	நுழைகிறேன்
	படப்பெட்டியைத்	தேடுகிறேன்
	படப்பெட்டியைக்	கண்டுபிடிக்கிறேன்
	படப்பெட்டியைக் கையில்	எடுக்கிறேன்
	படப்பெட்டியோடு வெளியே	வருகிறேன்
	கதவைத் திரும்பவும் or மறுபடியும்	சாத்துகிறேன்
	என் உபாத்தியாயரைப்	படம் பிடிக்கிறேன்

(*c*) To read and write:—Show the picture of a swing and say, ஊஞ்சல். Teach them the correct pronunciation and then, show the secondary forms of ஊ,

(1) ூ in கூ.

(2) ூ in பூ, யூ, வூ.

(3) ூ in டூ, மூ, ரூ, ழூ.

(4) ூ in தூ, நூ, லூ, றூ, னூ.

(*d*) Count up to 50, 60, 70, 80, 90, 100, &c.

இருபத்தேழாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Actions of the body; Change person, gender and tense.

(2) Quotational forms. Change person, gender and tense.

1. Drill Table No. 12. (Conjugation of Verbs. Present tense.)

காதுகளால்	கேட்கிறோம்
கண்களால்	காண்கிறோம்
மூக்கால்	முகருகிறோம்
கைகளால்	வேலைசெய்கிறோம்
கால்களால்	நடக்கிறோம்
வாயால்	பேசுகிறோம்
நாக்கால்	ருசிக்கிறோம்
பற்களால்	கடிக்கிறோம்

2. Drill Table No. 13. (Direct Quotation.)

அவர்	என்னைப் பார்த்து	‘கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக’	என்றார்
	என்னை நோக்கி		or
	எனக்குப் பிரதியுத்தரமாக		என்று
	என்னிடத்தில்		சொன்னார்
	என்னிடம்		

(*c*) To read and write:—Show the picture of a rat and say, எலி. Teach the Secondary form of எ,

ெ in செ, பெ, வெ &c.

(*d*) To read and write:—Show the picture of a ladder and say, ஏணி. Teach the Secondary form of ஏ,

ே in தே, மே, வே &c.

இருபத்தெட்டாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—(1) Tamil-English Months.

(2) Adverbial clauses of purpose. (Change person, gender & tense.)

	தமிழ் மாதங்கள்.	இங்கிலீஷ் மாதங்கள்.
1	சித்திரை	ஏப்ரில்
2	வைகாசி	மே
3	ஆனி	ஜூன்
4	ஆடி	ஜூலை
5	ஆவணி	ஆகஸ்டு
6	புரட்டாசி	செப்டெம்பர்
7	ஐப்பசி	அக்டோபர்
8	கார்த்திகை	நொவம்பர்
9	மார்கழி	டிசெம்பர்
10	தை	ஜனுவரி
11	மாசி	பெப்ருவரி
12	பங்குனி	மார்ச்சு

2. Drill Table No. 14. (Adverbial clause of positive purpose.)

நான்.	தமிழ்.	1. படிக்க 2. படிக்கவேண்டும் என்று 3. படிக்கிறதற்கு-ஆக படிப்பதற்கு-ஆக 4. படிக்கிறதற்கு-என்று படிப்பதற்கு-என்று 5. படிக்கும்படி 6. படிக்கும்படிக்கு 7. படிக்கும்படியாக 8. படிக்கும் பொருட்டு	கொடைக்கானலுக்கு	வந்தேன்.

(c) To read and write:—Point out an Ordained Minister and say, இவர் நல்ல ஐயர். Teach the Secondary forms of ஐ,

(1) ை in கை, தை, பை, மை.

(2) ஃ in லை, ளை, ழை, ணை.

இருபத்தொன்பதாம் அப்பியாசம்.

(a) Review.

(b) Introduce:—Adverbial clause of (1) Negative purpose. (2) Time. (3) Place.

(1) Drill Table No. 15. (Adverbial clauses.)

காய்ச்சல்	வராதபடி வராதபடிக்கு வராதிருக்கும்படி வராதிருக்கும்படிக்கு வராமல்	Lest........	ஊசி மருந்து குத்திக் கொண்டேன்.
நான்	சொல்லுகிறபோது சொன்னபோது சொல்லும்போது சொல்லுகையில்	while when, as........	அவன் பாடினான்.
நான்	சொல்லுகிற வரையில் சொன்ன வரைக்கும் சொல்லும் அளவும்	until, as far as........	அந்த வேலை செய்
நான்	கோவில் வரை கோவில் மட்டும், மட்டுக்கும் சொன்னது வரை	As far as...	போனேன்.
நான்	சாப்பிடும் முன்னே	Before	வா.
நீ	சாப்பிட்ட பிறகு	After	வா
நீ	சாப்பிட்ட உடனே	As soon as...	போ.

(*c*) To read and write —(1) Show the picture of a camel and say, ஒட்டகம் and teach the Secondary form of ஒ,

(1) ெ—ா in **கொ, நொ, சொ.**

(2) ெ ா in **ணொ, னொ, றொ.**

(*d*) To read and write:—(2) Show the picture of a boat and say, ஓடம். Then teach the Secondary form of ஓ,

(1) ே—ா in **கோ, நோ, சோ.**

(2) ே ா in **ணோ, னோ, றோ.**

முப்பதாம் அப்பியாசம்.

(*a*) Review.

(*b*) Introduce:—Adverbial clause of (1) Manner.
(2) Result.

1. Drill Table No. 15. (Adverbial clauses.)

அவர்கள்	சொல்லுகிறபடி சொன்னபடி சொன்னதின்படி சொற்படி	As...... According	நாங்கள் நடப்போம்.
அவர்கள் என்னைப்	பார்க்கிறாப் போல பார்த்தாப் போல் பார்க்குமாப் போல பார்க்கிறாற் போல பார்த்தாற் போல பார்க்கிறது போல். பார்த்தது போல் பார்ப்பது போல்	As if...........	நின்றார்கள்.
நீங்கள்	சொல்லுகிற படியால் சொன்னபடியினால் சொல்லுகின்றமையால் சொன்னமையால்	Because As......	அதைச் செய்தேன்.

(*c*) To read and write:—Show a bottle of Medicine and say, ஔடதம். Teach the Secondary form of ஔ. ie. ெ—ள in வௌவால், கௌதாரி, &c.

(*d*) Sanskrit letters that are used in Tamil:—

1. ஜ in ஜனம்; ஜ=Ja
2. ஸ in ஸர்ப்பம்; ஸ=Sa
3. ஷ in புஷ்பம்; ஷ=Sha
4. ஹ in ஹாரம்; ஹ=ha
5. க்ஷ in பக்ஷி; க்ஷ=tcha

முப்பத்தோராம் அப்பியாசம்.

(Relative Participles, Positive.)

(*a*) Present tense:—

நம்மை ஆளுகிற அரசன் ஐந்தாம் ஜியார்ஜ்.
குற்றம் செய்கிற ஆள் குற்றவாளி.
பாவம் செய்கிற ஆத்துமா சாகும்.
பாவிகள் வசிக்கிற இடம் நரகலோகம்.
தேவன் நிற்கிற ஸ்தலம் பரிசுத்தமானது.
கட்டளையை மீறுகிற எவனும் தண்டிக்கப்படுவான்.
நீங்கள் படிக்கிற பாஷை மெத்தவும் இனியது.
நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவலையா யிருங்கள்.
அங்கே போகிற ஸ்திரியை நிறுத்துங்கள்.
வகுப்புக்கு வருகிறபோது அதைப்பற்றிப் பேசுவேன்.
நீங்கள் குடிக்கிற தண்ணீரைக் கொதிக்க வையுங்கள்.

(*b*) Past Tense:—

இது நேற்று வந்த கடிதம்.
அவர்கள் செய்த மோசம் பொல்லாதது.
நேற்றுப் படித்த பாடத்தைச் சொல்லுங்கள்

நீங்கள் போன காரணம் என்ன?
மனம் போனபடி நடக்க வேண்டாம்.
நான் பிறந்த வருஷம் சொல்லமாட்டேன்.
நீங்கள் வேண்டிய மட்டும் சாப்பிடுங்கள்.
இங்கே வந்த காரியம் நிறைவேறுகிறது.
மரித்த கர்த்தர் உயிர்த்து எழுந்தார்.
எடுத்த கருமம் தொடுத்து முடி.

(*c*) Future tense:—

வரும் நாளில் வந்தே தீரும்.
போகும் நாளில் போயே தீரும்.
வருங் கோபத்துக்குத் தப்பித்துக்கொள்.
இறக்கும் மனிதர் பிழைக்கவும் கூடுமோ?
நடக்கும் பரீட்சையில் நானும் தேறுவேன்.
தலை நோகும்பொழுது மருந்து சாப்பிடு.
சாகும் பொழுது உன்னோடு என்ன வரும்?
செய்யும் வேலையை யோசித்துச் செய்.
நான் கொடுக்கும் பணத்தில் மீதம் இருக்கும்.
செல்லும் செலவைக் கணக்குப் பார்.

முப்பத்திரண்டாம் அப்பியாசம்.

A. Rel. Part. Negative:—

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.
போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
தூக்கம் வராதபடி கோப்பி சாப்பிட்டேன்.
சொல்லாத பேச்சு வெளிக்கு வராது.
கொடுக்காத செல்வம் குறையாது.
இறைக்காத கிணறு ஊறாது.

B. Participial Noun, Present tense:—

தமிழ்ப் படிப்பிக்கிறவர் பேர் தெரியுமா?
ஊக்கப் பேசுகிறவர் வியாதியில் விழுவார்.

வேகமாய்ப் போகிறவர்கள் வண்டியில் ஏறுவார்கள்.
அங்கே போகிறவன் யார்?
அங்கே போகிறது யார்?
நீங்கள் சாப்பிடுகிறது தண்ணீரோ, பாலோ?
பாவத்தை விதைக்கிறவர்கள் பாவத்தையே அறுப்பார்கள்.

C. Part. Noun, Past tense:—

அரண்டவனுக்கு இருண்ட தெல்லாம் பேய்.
வந்தவர், போனவ ரெல்லாம் ஒருவார்த்தை சொல்லுகிறுர்கள்.
படித்தவர் பாடம் ஒப்புவிக்க வேண்டும்.
இதைக் கண்டவர் கேட்டவர் ஒருவருமில்லை.
நடந்ததை நடந்தபடி சொல்ல வேண்டும்.

D. Part. Noun, Future tense:—

நீ சொல்லுவது மெய்.
நாம் மாமிசம் சாப்பிடுவது நல்லதல்ல.
நம்மைவிட்டுப் போபவை நம்முடையவை அல்ல.
கடன் கேட்பவர் சிக்கெனக் காரரோ?
நிற்பவர் விழாதபடி எச்சரிக்கையா யிருக்கக்கடவர்.
எப்போதும் கொடுப்பவரும் இன்று கொடுக்கவில்லை.

E. Part. Noun, Negative:—

அவர் வந்ததும் வராததும் சொல்.
குறையாதது கல்வி, குறைவது செல்வம்.
படியாதவன் மூடன்.
கண் தெரியாதவன் குருடன்.
காது கேளாதவன் செவிடன்.
வாய் பேசாதவன் ஊமை.
கால் இல்லாதவன் முடவன்.
பணம் இல்லாதவன் ஏழை.

முப்பத்து மூன்றும் அப்பியாசம்.

On Prayer:—

A எங்கள் அன்புள்ள பரம பிதாவே!

எங்கள் கிருபையுள்ள ஆண்டவரே!

மகா இரக்கமும் தயவு மிகுந்த கர்த்தாவே!

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே!

எங்கள் பரிசுத்த பராபரனே!

சேராபீன்களாலும், கேராபீன்களாலும் பரிசுத்தர் பரிசுத்தர்.

என்று போற்றப்படுகிற தெய்வமே!

எங்களைப் படைத்து, ஆண்டு நடத்தி வருகிற வல்லமையுள்ள கர்த்தரே!

B. கடந்த நாட்களிலே எங்களோ டிருந்தீர்.

பக்கத் துணையும் பாதுகாவலுமா யிருந்தீர்.

நாங்கள் எங்கள் மனோ வாக்குக் காயங்களினால் செய்த பாவங்கள் எத்தனை ஏராளம்!

அறிந்தும் அறியாமலும் அளவற்ற பாவஞ் செய்தோம்.

தெரிந்தும் தெரியாமலும் எண்ணிறந்த பாவங்களைச் செய்தோம்.

எங்களுக்குத் தேவையான எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறீர்.

இவைகளுக்காக நாங்கள் மெத்த நன்றி செலுத்துகிறோம்.

ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவைகளுக்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம.

C. இந்தச் சமயத்திலே எங்கள் மத்தியில் வாரும்.

எங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும்.

உம்முடைய ஆசீர்வாதத்தை எங்களுக்குத் தாரும்.

பரிசுத்த ஆவியின் அருளை எங்கள்மேல் ஊற்றியருளும்.

எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னித்தருளும்.

உம்முடைய ஊழியத்துக்கு வேண்டிய ஞானம், பெலம், சுகம் தாரும்.

இந்தத் தேசத்தில் செய்யப்படுகிற ஊழியத்தை ஆசீர்வதியும்.

இந்திய சபைகளை ஆசீர்வதியும்.

அவர்கள் உம்மை அறிகிற அறிவில் வளரவும், உம்மிலே நிலைத்திருக்கவும் கிருபை யளியும்.

நல்ல மழையைக் கட்டளையிடும்.

பஞ்சம், கொள்ளைநோய் முதலியவற்றை நீக்கும்.

தேசத்திலே சமாதானத்தைக் கட்டளையிடும்.

நாங்கள் எங்களை உமக்கென்று தத்தம்செய்யக் கிருபைதாரும்.

D. இவை எல்லாவற்றையும் இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய்க் கேட்கிறோம், சுவாமி!

இந்தநன்மைகளை எல்லாம் எங்களுக்காகப்பாடுபட்டு, இரத்தம் சிந்தின இயேசு சுவாமியின் நாமத்தினால் பிரார்த்திக்கிறோம். பிதாவே!

இவைகளை இயேசுவின் நாமத்தில் பிரார்த்திக்கிறோம்.

இந்தச் சுருக்கமான விண்ணப்பத்திற்குப் பெருக்கமான ஆசீர்வாதத்தைத் தரவேண்டுமென்று இயேசுவின் பாதத்தில் விழுந்து, கெஞ்சிக் கேட்கிறோம் பிதாவே! ஆமென்.

E. Lord's Prayer:—

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் ஆகாரத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்தருளும். இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

F. Benediction:—

நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையும், பிதாவாகிய தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்யமும் நம்மனைவரோடும் சதா காலங்களிலும் இருப்பதாக. ஆமென்.

G. Doxology:—

ஒன்றாக ஆட்சி செய்கிற
திரியேக தேவனாகிய
பிதாக் குமாரன் ஆவிக்கே.
மா ஸ்தோத்திரம் உண்டாகவே, ஆமென்.

முப்பத்து நாலாம் அப்பியாசம்.

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

(1) உயிர் எழுத்து (Vowels) 12
(2) மெய் எழுத்து (Consonants) 18

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

(3) உயிர் மெய் எழுத்து (Vowel consonants.) 216

(4) ஆயுத எழுத்து (Weapon letter) 1

ஆக மொத்தம் 247

முப்பத்தைந்தாம் அப்பியாசம்.

Charts for Reading, Pronunciation & Dictation:—

No. 1.

மடம்	மட, மட
படம்	பட, பட
டம்பம்	டப, டப
அடம்	டம, டம
பட்டம்	டப், டப்
மட்டம்	பம், பம்,

No. 2.

மரம்	இடம்	ரம், ரம்
பாரம்	இட்டம்	அம்ம
அரம்	அட்டம்	அம்மம்ம
அப்பம்	பம்பரம்	
அப்படம்	ரப்பர்	
டம்பர்	அப்பர்	

No. 3.

வட்டம்	தட, தட
மட்டம்	வட, வட
திட்டம்	வர, வர
வரம்	வடம்
தரம்	தர்மம்
தர்ம	தடம்

No. 4.

சக்கரம்	கரம்	சட்டம்
சப்பரம்	நகம்	சடலம்
ரகரம்	நயம்	கடகம்
தகரம்	கப்பம்	கட்கம்
நகரம்	கப்பல்	பட்டயம்
லகரம்	பகல்	அக்கம்
நரகம்	கட்டம்	பக்கம்
	கட்டடம்	கம்பம்

No. 5.

அசல்	தச்சன்	சனம்
தசம்	அச்சம்	சன்னம்
பட்சம்	சன்னல்	அப்பன்
ரசம்	அம்சம்	அம்மன்
வசம்	வம்சம்	சவம்
வயல்	இனம்	வசனம்
கயம்	வனம்	பதக்கம்
லட்சம்	சனம்	மகன்

No. 6.

இது தங்கப் பணம்
அது தங்கப் பதக்கம்
சத்தம் பண்ணல்
இது பணச் சங்கம்
கன்னம் கனம்
மண் பண்டம்
நந்தன் பட்டணம்
சத்தம் சங்கடம்
தன் தன் தண்டம்
இது தங்க மணம்
பண்ணல் சங்கடம்

No. 7.

பழம்	அங்கம்
கலம்	பங்கம்
கல்	கம்மல்
கள்	மங்கல்
கள்ளன்	தழல்
பல்	கலகம்
பல்லன்	கலங்கள்
பள்ளம்	கலகங்கள்
பள்ளன்	கள்ளர்கள்

No. 8.

மாமா, கால் அஞு தா
அம்மா, புரு வாய் பார்
தாசா, வா

சா, அண்ணா!

பால்	நாணா
வால்	காண்
நாள்	சாண்
வாள்	மான்
வாழ்	வாடா
தாழ்	சடா

No. 9.

விசிறி	சரி	மலடி	நாடி
தடி	விரி	பிடரி	அங்கி
நடி	கனி	தடி அடி	சக்கிலி
படி	பனி	தாடி	பக்கிரி
காடி	இனி	மடி பிடி	சம்மட்டி
வாடி	பட்டி,	வட்டி,	சட்டி.

பாம்பாட்டி, வாடிப்பட்டி, காடி.

No. 10.

ஈ, தீ. நீர், சீர், பீர், சீச்சீ.
கீதம், சீதளம், ஈச்சம் பழம்.
ஈசன், ஜீவன், ஜீவனம், ஜீவியம்
மீதம், வீதம், சீஷன், பீடம்.
ஈனம் மீன், சீனி, தீனி.

No. 11.

உடுப்பு	விறகு	அறுபது
உடுத்து	வாக்கு	இருபது
படு	துட்டு	முப்பது
படுத்து	புல்லு	உடம்பு
சாக்கு	முடி	திருடு
கக்கு	பழு	கட்டு
சுக்கு	தின்னு	புண்
மிளகு	உண்ணு	காடு
சுளகு	சுகம்.	

No. 12.

பூ, பூட்டு, கூட்டம், பூட்டன்.
பூதம், சூது, ஊது, நூல், மூலம்.

யூகம், ரூபம், கூப்பிடு, கூச்சம்.
தூண், தூபம், மூடன், மூப்பர்.

No. 13. எலி, ஏணி, செங்கல், வேதம்.
செடி, செட்டி, பெண்சாதி, பேசாதே.
படி, பட்டி, பேச்சு, மேய்ச்சல்.
வெளி, வெள்ளி, வேலி, வெளியே.
தேள், தேசம், தேகம், நேசம்.
கேவலம், கெட்ட, கேட்ட, மேய்ப்பன்.

No. 14. ஐயர் கையைப் பார்.
ஆயாள் வேலை தெரியுமா?
மயில் பறவை ஐந்து மைல் பறக்கும்.
காலை மாலை வேலை செய்.
கையைப் பிள்ளை பிரியமாய்ப் பிடித்தது.
வெற்றிலை, புகையிலை எங்கே?
தைத்த பையில் வைத்த பாகை இதா?
இம்மை மறுமை ஜீவியம் உண்டு.
தயிர்க்காரி தையற்காரனைப் பார்த்து நகைத்தாள்.

No. 15. கொடைக் கானலுக்குக் கோடை காலத்தில் வா.
நொண்டி நொண்டி நடந்து போனான்.
கொக்கைக் கொன்று கொல்லன் தின்றான்.
நோகிறேன், நொந்தேன், நோவேன்.
படிக்கிறோம், படித்தோம், படிப்போம்.
நானோ, நீயோ, போடி போனது?
நோய்க்கு இடங்கொடேல்.
சொத்துச் சுகங்கள் யாவுந் தோற்றான்.
ஒரு உடுப்பெடுக்க ஒரு யுகம் செல்லும்.
ஒன்பது ஊழியர் ஒன்றரை ரூபாய் கொடுத்தார்கள்.

No. 16. நீங்கள் சௌக்கியமா?
சவுக்கியமானால் ஔடதம் ஏன்?
ஔவை என்பவள் ஒரு படித்தபெண்.

வௌவால், கௌதாரிப் பட்சிகள் தெரியுமா?
மௌனமா யிருந்தால் கௌளி கத்தும்.
வெள்ளெலும்பைக் கௌவிக் கடித்தது.
ஔவை எனக் கோர் ஔடதம் கொடுத்தாள்.

No. 17. (ட, த, ற, ட்ட், த்த், ற்ற்.)

இதோ, புதுப் பட்டணம் பார்.
குற்றம் அற்ற கொற்றன் இவன்.
பத்துப் பட்டணம் சுற்றிலும் உண்டு.
அவன் மட, மட வென்று பேசினான்.
நேற்றுத் தத்தன் பட்டோலை வாசித்தான்.
தோட்டக்காரன் வீட்டிற் புகுந்தான்.
கத்தி எடுத்து வட்டஞ் சுற்றினான்.
காத்துப் பார்த்து நாட்டிற்குள் நுழைந்தான்.
எட்டி எட்டிப் பார்த்துக் கண்பூத்துப் போயிற்று.
பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்.
கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளிலே தெரியும்.

No. 18. (ந்த், ண்ட், ன்ற்.)

நந்தன் வந்து, நின்று பேசினான்.
கொண்டு வந்த சந்தனம் நொந்து போனது.
சண்டையிட்டு வந்த பேர்கள் நிந்தை அடைந்தார்கள்.
கன்றுக் குட்டி ஒன்று, இன்று கொண்டு வந்தான்.
வந்தனம் மிகத் தந்தேன், மைந்தன் இயேசுவுக்கே.
காந்தியைப் பார்த்துக் கண்டவர் மகிழ்ந்தனர்.
சுந்தரம் என்றுஞ் சந்தோஷம் கொண்டாடினார்.
சண்டைக்குப் போய் மண்டை யுடைந்தது.
ஒன்றும் இரண்டும் மூன்றுமே.
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ?

No. 19 (ர, ழ, ல், ள்.)

மரநிழலில் கொஞ்சம் உட்கார்ந்தான்.
பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.

வரவரப் பழவர்க்கங்களின் விலை குறைந்தது.
அவர்கள் நல்ல பாடல்களைப் பாடினார்கள்.
கற்க கசடற, நிற்க அதற்குத் தக.
இயேசு இரட்சகரின் பிரசங்கங்களைக் கேட்கவும், அவரு டைய அற்புத அடையாளங்களைப் பார்க்கவும் அநேகர் வந்து கூடினார்கள்.

No. 20. (ங்க, ண்க, ஞ்ச.)

எங்கள் கண்கள் பஞ்சடைந்தன.
கொஞ்சம் நஞ்சு தின்னக் கெஞ்சினான்.
தங்கத் தூண்கள் எங்கே பார்த்தீர்.
மஞ்சள் அழகு பெண்களில் தெரியும்.
பெண்சாதிக் கழகு எதிர்பேசா திருத்தல்.

Conversational Exercises.

PART—II.

No. 1. On Family affairs:—

தாய் தந்தையர் உண்டா?
பெற்றார் உயிரோடிருக்கிறார்களா?
போஷகர் யாராவது உண்டோ?
தகப்பனார் காலஞ் சென்றாரா?
அண்ணன் தம்பிமார் இருக்கிறார்களா?
சகோதர சகோதரிகள் இல்லையா?
அக்காள் தங்கச்சிமார் எத்தனைபேர்?
உன் தகப்பனுக்கு ஒரு தாரமா?
இளைய தாரம் or மூத்த தாரம்.
மூத்த தாரத்துக்குப் பிள்ளை குட்டிகள் உண்டா?
முதல் தாரம் or இரண்டாந்தாரம்.
விவாகம் ஆயிற்று?
கலியாணம் ஆகி எவ்வளவு காலம் ஆயிற்று?
க்ஷேமமாய் இருக்கிறீர்களா?
உத்தியோகம் என்ன?
சம்பளம் கட்டிவருகிறதா?
வரவு செலவு என்ன?
மீதம் பிடிக்கிறீர்களா?
நீங்கள் ஒட்டைக் கைகள் தானா?
பிள்ளைகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறீர்களா?
பேரப்பிள்ளைகள் உண்டா?
நரைத்துப் பூத்துப் போனீர்களா?
மிதமிஞ்சிச் செலவு செய்யலாமா?
செட்டாய் ஜீவிக்க வேண்டும்.
எப்போதும் பஞ்சங் கூறுகிறாயே.
குடும்பத்தில் சண்டை சச்சரவுண்டா?

இன ஜன பந்துக்கள் எங்கே?
பிள்ளைகளைப் படிக்க வைக்கிறாயா?
சிம்பில் வளையாதது கொம்பில் வளையுமா?
தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டு.
அவன் தன் தகப்பன் சாடையி லிருக்கிறான்.
அவன் உனக்கு என்ன வேண்டும்?
நீ குடும்பத்தில் மூத்தவனா?
குடும்பத்தில் நீ எத்தனையாவது பிள்ளை?
உனக்குக் கைப்பிள்ளை உண்டா?
இவர்கள் இரட்டைப் பிள்ளைகளா?

No. 2. On Education:—

எங்கே படித்தீர்கள்?
எத்தனை உபாத்திமார்?
எத்தனை மாணாக்கர்?
எவ்வளவு காலம் படித்தீர்கள்?
என்னென்ன பாடங்கள் படித்தீர்கள்?
என்ன நோக்கத்திற்காகப் படித்தீர்கள்?
என்ன பட்டம் பெற்றிருக்கிறீர்கள்?
தேறின பிறகு என்ன உத்தியோகம் செய்தீர்கள்?
உங்கள் கலாசாலையைக் குறித்து விஸ்தரிக்க முடியுமா?
வருஷம் என்ன சம்பளம் கொடுத்தீர்கள்?

No. 3. Journey to India:—

நீங்கள் இந்தியாவுக்கு ஏன் வந்தீர்கள்?
இந்தியாவுக்கு வர எப்போது தீர்மானித்தீர்கள்?
நீங்கள் இங்கேவரக் காரணமாயிருந்தவர்கள் யார்?
இந்தியாவைப்பற்றி முன்னமே தெரியுமா?
எவ்விதம் அறிந்தீர்கள்?
ஒரு ஆள் மிஷனெரியாக வர விரும்பினால் செய்யவேண்டிய ஒழுங்குகள் என்ன?
உங்கள் பிராயாணத்துக்கு ஒழுங்கு செய்தது யார்?

யார் யாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டீர்கள்?
பயணஞ் சொல்லிக்கொண்டீர்களா?
உங்கள் பெற்றோர் சந்தோஷமாய் வழிவிட்டனுப்பினார்களா?
உங்கள் சாமான்களை எங்கே நிறுத்தீர்கள்?
வழிச்செலவுக்குப் போதுமான பணமிருந்ததா?
எத்தனை நாள் புகைவண்டிப் பிரயாணம்?
எத்தனை நாள் தரைப் பிரயாணம்?
எத்தனை நாள் கப்பல் பிரயாணம்?
ஆகாயக் கப்பலில் வந்தீர்களா?
எப்போது புறப்பட்டீர்கள்?
எந்தத் துறைமுகத்தில் கப்பல் ஏறினீர்கள்?
நேரே வந்தீர்களா? இடைக்கிடை தங்கினீர்களா?
நீங்கள் வழியில் கண்ட காட்சிகள் என்ன?
என்ன செலவு பிடித்தது?
நேரத்துக்கு நேரம் சாப்பிட்டீர்களா?
கப்பல் வியாதியுண்டானதா?
கடுங்காற்றுண்டானதா?
எத்தனை கப்பல்கள் மாற்றினீர்கள்?
இந்தியாவில் முதலாவது எங்கே வந்து சேர்ந்தீர்கள்?
உங்களைச் சந்தித்து, அழைத்துக்கொண்டுபோனது யார்?
கப்பலில் எப்படிப்பட்ட விளையாட்டுகள் விளையாடினீர்கள்?

No. 4. Description of a Town:—

நீங்கள் எந்த ஊரில் வேலை செய்வீர்கள்?
இந்தியாவின் எந்தப் பாகத்திலிருக்கிறது?
எந்த இராஜதானியிலிருக்கிறது?
அது எந்த ஜில்லாவைச் சேர்ந்தது?
அப்பட்டணத்தின் சுற்றளவு என்ன?
அப்பட்டணத்தின் குறுக்களவு என்ன இருக்கும்?
ஜனத்தொகை என்ன?

அதின் சீதோஷ்ண ஸ்திதி எப்படி?
அது ஒரு வியாபார ஸ்தலமா?
அதை ஆளுகிற கலெக்டர் பேர் என்ன?
சுத்தமான இடமா?
விசாலமான வீதிகள் உண்டா?
நீதிஸ்தலங்கள் உண்டா?
என்னென்ன ஜாதியார் வசிக்கிறார்கள்?
என்னென்ன மதஸ்தர் அங்கே வசிக்கிறார்கள்?
அவர்கள் செய்யும் தொழில்கள் என்ன?
விசேஷித்த கட்டிடங்கள் உண்டா?
அங்கே சாமான்கள் சௌக்கியமா, கிராக்கியா?
துணிமணிகள் விலை சரசமா?
நன்செய் புன்செய்த் தானியங்களெவை?
மெத்தை வீடுகள் அநேகம் உண்டா?
பட்டணத்தின் விஸ்தீரணம் என்ன?

No. 5. Description of Mission work:—

நீங்கள் எந்த மிசியோனைச் சேர்ந்தவர்கள்?
ஏன் அந்தப் பேர் கிடைத்தது?
அந்த மிஷன் தலைமைச்சங்கம் எங்கே இருக்கிறது?
அதில் எத்தனை அங்கத்தினர் இருக்கிறார்கள்?
தலைமைச் சங்கத்தின் தலைவர் யார்?
லிகிதர் அல்லது காரியதரிசியின் பேர் என்ன?
பொக்கிஷதார் ஆணா பெண்ணா?
உங்கள் மிஷனை மேல் பார்க்கிறவர் யார்?
உங்கள் மிசியோன் உண்டாகி எத்தனை வருஷம் ஆயிற்று?
மிஷனை ஸ்தாபித்த மிஷனெரிமார் யார்?
சீர்மையிலிருந்து போதுமான பணம் வருகிறதா?
வருஷந்தோறும் புது மிஷனெரிகள் வருகிறார்களா?
உங்கள் சபை சுயதாபரிப்பு உள்ளது.
கிறிஸ்தவர்களின் மொத்தத் தொகை என்ன?
ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேர்?

உட்சபையில் சேர்ந்தவர்களின் கணக்கு என்ன?
பரிசுத்த நற்கருணை வருஷத்தில் எத்தனை தரம்?
இராப்போஜனம் எப்படிப் பரிமாறுகிறார்கள்?
பொதுப் பாத்திரமா, தனிப் பாத்திரமா?
உங்கள் கொள்கை என்ன?
மாதாந்தரக் கூட்டங்களுண்டா?
ஆசாமிகளின் வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?
உங்கள் மிசியோன் செய்யும் வேலைகள் எவை?

I. பள்ளிக்கூட வேலை நடக்கிறதா?
எத்தனை ஆண் பெண் பாடசாலைகள்?
எத்தனை உயர்தரக் கலாசாலைகள், கல்லூரிகள்?
எலிமெண்டரி பாடசாலைகள் அநேகம் உண்டோ?
போதனாசாலை எங்கே வைக்கப்பட்டிருக்கிறது?
நவீன முறைகளைக் கையாடுகிறீர்களா?
போர்டிங் பாடசாலை எப்படி நடக்கிறது?
மாணாக்கர் மாதந்தோறும் என்ன பீஸ் கட்டவேண்டும்?
இலவசப் படிப்பும், கட்டாயப்படிப்பும் அவசியமா?
சர்க்கார் உதவி செய்கிறார்களா?
பள்ளிக்கூட வருமானம் எவ்வளவு?
இந்திய உபாத்திமார், உபாத்திச்சிமார் உண்டா?

II. கைத்தொழில் வேலை நடக்கிறதா?
தச்சுவேலை, நெசவுவேலை, தையல்வேலை, பாய்முடைதல், பிரம்புவேலை, அச்சாபீஸ்வேலை, விபசாயவேலை, கொல்லு வேலை முதலியவைகள் நடந்தேறுகின்றனவா?

Tools:—ஊசி, உளி, வாள், மூலமட்டம், இழைப்புளி, அரம், கொட்டாப்புளி, மண்வெட்டி, கடப்பாரை, கோடரி.

III. வைத்திய வேலை செய்கிறீர்களா?
எங்கெங்கே ஆஸ்பத்திரிகளுண்டு?
வைத்தியர்கள் கைதேர்ந்தவர்களா?

ஒருநாளில் எத்தனைபேர் சிகிச்சை பெறுகிறார்கள்?
வியாதிக்காரருக்கு வேண்டிய வசதிகள் உண்டா?

Diseases:—காய்ச்சல், தலைநோவு, இருமல், வாந்திபேதி, விஷபேதி, ஜலதோஷம், புண், குஷ்டம், வயிற்றுவலி, வயிற்றோட்டம், பல்வலி, கண்வலி, வாதம், வீக்கம்,பித்தம், மயக்கம், நீர்க்கோவை, சின்னம்மை, பெரியம்மை, காசம், க்ஷய ரோகம், அஜீரணம், கக்குவான், ஜன்னி, மூலம், பைத்தியம், காமாலை, சிலந்தி, நஞ்சு, மலபந்தம், யானைக்கால், சிரங்கு, நீரிழிவு, வலிப்பு.

IV. பிரசங்கவேலை:—

சுதேச ஊழியர், புறதேச மிஷனெரிமார்.
ஒற்றுமை உண்டா? பிரிவினை இல்லையே?
ஐக்கிய சபை அவசியமா?
நீங்கள் தென்னிந்தியா ஐக்கியசபையில் சேர்ந்தவர்களா?
காணிக்கைகள் எப்படி வசூல் ஆகின்றன?
அறுப்பின் பண்டிகை, கலயக்காணிக்கை, உண்டியற் கலயம், பிடியரிசிக் காணிக்கை, வருஷாந்தரக் கையொப்பம், தோத்திரக் காணிக்கை, தர்ம சங்கம், கிறிஸ்தவ பக்தி, முயற்சி சங்கம், ஓய்வுநாட் பள்ளிக்கூடம், தாய்மார் சங்கம், ஏலக்காணிக்கை. சபை ஆளுகை, வேதாகமஸ்திரிகள், போதகர், குரு, உபதேசியார், கோவில் கூட்டி, கலியாணம், மரணம், அடக்கம், சபை சிட்சை, காணிக்கைப்பை, &c.

Service:—தேவ ஆராதனை தொடங்குவோம்.
கர்த்தருடைய நாமத்துக்கு மகிமையாக 10-ம் ஞானக் கீர்த்தனை பாடக்கடவோம்!
கர்த்தரை நோக்கி ஜெபம் செய்வோமாக!
கர்த்தருடைய ஆசீர்வாதத்தைத் தேடுவோமாக!
எழுந்து நின்று 10-கட்டளைகளைக் கேட்போமாக!
100-ம் சங்கீதத்தை மாறிமாறி வாசிப்போமாக!

கனம் உவில்லியம் நம்மை ஜெபத்தில் நடத்துவாராக!

வேதத்திலிருந்து சில வாக்கியங்களை வாசிக்கக் கேட்போமாக!

